

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (19.11.2024) தலைமை செயலகத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து சி.எம்.டி.ஏ. பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறை உயர் அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசின் நிதி ஆணையத்திற்கு முதலமைச்சர் அளித்திட்ட நவமணியான கருத்துரு!

# நிதி ஆணையத்தின் மனந்திறந்த பாராட்டு - ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கான ஆக்கப்பூர்வமான பாராட்டே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

**சென்னை, நவ. 20 -**

**ஒன்றிய அரசின் நிதி ஆணையத்திற்குத் தமிழ்நாடு அரசு அளித்த ஆய்வு அறிக்கை - அந்த அறிக்கை பற்றியும் நிதி ஆணையத் தலைவர் அளித்த பாராட்டுகள்பற்றியும், தமிழ்நாடு அரசின் ஆய்வு அறிக்கை அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைக் குரல் என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

மாநிலங்களுக்கிடையே நிதி வருவாயை தக்க வகையில் பங்கிட்டுக் கொடுக்கவும், அதன்மூலம் மாநிலங்களின் வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவும், அரசமைப்புச் சட்டப்படி நிதி ஆணையம் அமைக்கப்பட்டு, அதில் பொருளாதார வல்லுநர்கள் இடம்பெற்று, மாநிலங்களுக்கும் சென்று, மாநில அரசின், மக்களின், குறிப்பாக அரசியல் கட்சிகளின் கருத்துகளை கேட்டும், மாநிலங்களுக்கு நிதியைப் பிரித்து ஆண்டுதோறும் அளித்து வருவர்.

நேற்று (18.11.2024) 16 ஆவது நிதி ஆணையத் தலைவரையும், உறுப்பினராகிய பெருமக்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பாக வரவேற்று, அக்குழுவினரிடம் தங்களுடைய கருத்துரைகளை விளக்கமாகவும், விவேகத்துடனும் எடுத்துரைத்துள்ளார்.

1. நிதிப்பகிர்வு கடந்த 15 ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி 41 விழுக்காடாக உயர்த்தியதை நாங்கள் (தமிழ்நாடு ‘திராவிட மாடல்‘ அரசு) உளமாரப் பாராட்டுகிறோம். எனினும், இந்தப் பரிந்துரைக்கு மாறாக, கடந்த 4 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 33 விழுக்காடு மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக்கிறது.

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் இடம்பெற்றிருக்கும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணம் ஆகியவற்றை ஒன்றிய அரசு இக்காலகட்டத்தில் பெருமளவு உயர்த்தியதே இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

2. இது மட்டுமின்றி, ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்திடும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத் தொகை தொடர்ந்து உயர்ந்துவருவதும், தமிழ்நாடு போன்ற மாநில அரசுகளின் நிதி நிலையை மேலும் பாதிக்கின்றது.

ஒருபுறம் ஒன்றிய அரசிடமிருந்து வரவேண்டிய வரிப் பகிர்வு குறைவதால், மாநில அரசுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்! மறுபுறம், ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி என்ற இரண்டுமே மாநில அரசுகளுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன.

**மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப்படவேண்டும்!**

எனவே, ஒன்றிய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப்படுவதுதான் முறையான தாகவும், ஏற்புடைத்ததாகவும் இருக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு 50 விழுக்காடு பங்கீடு வழங்கப்பட்டால் மட்டுமே மாநிலங்கள் தங்களுடைய தேவைகளுக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி, நிதி மேலாண்மையில் உரிய சுயாட்சியுடன் செயல்பட இயலும்.

எனவே, ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்களிப்போடு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்குரிய அரசமைப்புச் சட்ட திருத்தங்கள் வாயிலாக ஒரு உச்சவரம்பை இந்த நிதிக் குழு பரிந்துரைத்து, மாநில அரசுகளுக்கான 50 விழுக்காட்டினை உறுதி செய்திடும் என்று நான் நம்புகிறேன்.

3. மாநிலங்களுக்கிடையேயான வரிப் பகிர்வினை முறைப்படுத்துவதில் சமச்சீரான அணுகுமுறை தேவைப்படுகிறது.

9 ஆவது நிதிக் குழு பரிந்துரைத்த 7.931 சதவிகிதத்திலிருந்து கடந்த 15 ஆவது நிதிக் குழுப் பரிந்துரைப்படி, 4.079 தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வு தொடர்ந்து வீழ்ச்சி யைச் சந்தித்து வந்துள்ளது!

நாட்டிற்கே வழிகாட்டும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி, செம்மையான நிர்வாகத்தைத் தொடர்ந்து நல்கிவரும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைத் தொய்வடையச் செய்து தண்டிப்பதைப்போல, தற்போதைய வரிப் பகிர்வு முறை அமைந்துள்ளதை நான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறேன். (இதுபற்றி மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் விளக்குகையில், 3.5 லட்சம் கோடி ரூபாய் இழப்பு தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ளதாகத் தெளிவாக விளக்கியுள்ளார்).



**முதலமைச்சர் சுட்டிக்காட்டிய அய்ந்து ஆபத்துகள்!**

இதற்கு மேலும் 16 ஆவது நிதி ஆணையத்திடம், நமது ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மிகவும் துல்லியமாக, அய்ந்து ஆபத்துகளையும் சிறப்பாக பட்டியலிட்டு விளக்கியு ள்ளார்.

1. முதியவர்கள் அதிகமாக வாழும் மாநிலமாகத் தமிழ்நாடு மாறிவரும் அபாயம்!

2. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவு நிதி, மானியங்களை வழங்க வேண்டும்!

3. செயற்கையாக உருவாக்கப்படும் நிதிப் பகிர்வு முறை எதிர்பார்த்த பலன்களைத் தராது!

4. தமிழ்நாடு சந்தித்துவரும் சவால்கள்!

5. கடந்த காலங்களில் தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வு காண்க!

என்று மிகவும் ரத்தினச் சுருக்கமாக மாநிலங்களின் பொருளாதார நிலையைப் பொதுவாகவும், தமிழ்நாட்டு நிதிநிலைபற்றிக் குறிப்பாகவும் குறிப்பிட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது!

“உறவுக்குக் கைகொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுப்பது” என்ற தத்துவத்தின் தனிப்பெரும் இலக்கியமாக இந்த அறிக்கை உள்ளது!

இந்தக் கோரிக்கை அறிக்கை விளக்கத்தைப்பற்றி, 16 ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் பிரபல நிதித்துறை வல்லுநர் திரு. அரவிந்த் பனகாரியா அவர்கள் செய்தியாளர்களிடம் குறிப்பிடுகையில், தமிழ்நாடு அரசின் கோரிக்கை விளக்க மனுபற்றியும், முதலமைச்சரின் விளக்கம்பற்றியும் வெகுவாகப் பாராட்டி யுள்ளது, ‘திராவிட மாடல்‘ ஆட்சிக்கும், அதன் ஒப்பற்ற முதலமைச்சருக்கும், நிதித் துறைக்கும் கிடைத்துள்ள மிகப் பெரிய ஆக்கப்பூர்வப் பாராட்டு ஆகும்!

‘திராவிட மாடல்’ ஆட்சியின் தெளிவான சிந்தனை, செயலாக்கத்திறன்!

ஒன்றிய நிதி ஆணையத்திடம் அளிக்கப்பட்ட அறிக்கை, மிகவும் கவலை எடுத்துக் கொண்டு உழைத்துத் தந்துள்ள முறையான ஒன்று.

1. *“Painstakingly and very Systematic”*

2. ஒரு ஆணையத்திற்குச் சிறந்த தெளிவான வகுப்பு எடுத்துச் சொன்னதுபோன்ற அறிக்கை. (*“A Master Class for any Commission”*)

3. மிகவும் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒன்று. *“By for the most well researched, the most comprehensive, very analytical”*

விரிவான, காரண காரியங்களுடன் கூடிய, கருத்துக் கோவையாகத் தரப்பட்ட அறிக்கை என்று கூறியுள்ளது, ‘திராவிட மாடல்’ ஆட்சியின் தெளிவான சிந்தனை, செயலாக்கத்திறன் - நியாயத்தின்மேல் நின்று எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டப்படிக்கானதாக உள்ளது என்பதையே மனந்திறந்து பாராட்டியது காட்டுகிறது!

இது 16 ஆவது நிதி ஆணையப் பரிந்துரைகளில் பிரதி பலிக்கும் என்று நம்புகிறோம்.

ஒட்டுமொத்த மாநிலங்களுக்குமான உரிமைகளுக்கும் சேர்த்தே எழுப்பப்பட்ட உரிமைக் குரல்!

தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவின் ஒட்டுமொத்த மாநிலங்களுக்குமான உரிமைகளுக்கும் சேர்த்தே எழுப்பப்பட்ட உரிமைக் குரல் இது - போற்றுகிறோம்!

இவ்வாறு கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை - பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயிலின்

# புதிய வெள்ளித் தேருக்கு - கூடுதலாக 90 கிலோ வெள்ளிக் கட்டிகள்!

## இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, நவ.20-

காளிகாம்பாள் திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேருக்கு கூடுதலாக 90 கிலோ வெள்ளிக் கட்டிகளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு :

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.11.2024) சென்னை, பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் புதிய வெள்ளித்தேர் செய்திட வெள்ளித் தகடு வேயும் பணிகளுக்கு உபயதாரரால் வழங்கப்பட்ட 90 கிலோ வெள்ளிக் கட்டிகளை திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்ற 68 தங்கத்தேர்கள் மற்றும் 55 வெள்ளித்தேர்களில் 15க்கு மேற்பட்ட திருக்கோயில்களில் செயலற்று இருந்த வெள்ளி மற்றும் தங்கத் திருத்தேர்களை ஓட வைத்த பெருமை திராவிட மாடல் அரசையே சேரும். 11 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 9 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சேலம், கோட்டை மாரியம்மன் தங்கத் தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர் போன்றவற்றை பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் உலா வரச் செய்துள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ரூ.29 கோடி மதிப்பீட்டில் 5 தங்கத்தேர்கள் மற்றும் ரூ.27.16 கோடி மதிப்பீட்டில் 9 வெள்ளித்தேர்கள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் பெரியபாளையம் தங்கத்தேர் மற்றும் திருத்தணி வெள்ளித்தேர் நிறைவுபெற்று பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் பயன்பாட்டில் உள்ளது. இதர வெள்ளித்தேர்களில் அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில் வெள்ளித்தேரும் ஒன்றாகும். இத்தேர் செய்திட ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு ரூ.12 லட்சம் செலவில் மரத்தேர் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. இந்த மரத்தேருக்கு வெள்ளித்தகடு வேயும் பணிக்கு 277 கிலோ 530 கிராம் அளவுள்ள வெள்ளி தேவைப்படுகிறது. அதில் கடந்த 02.08.2024 அன்று திருக்கோயில் மற்றும் உபயதாரர் மூலம் 133 கிலோ வெள்ளிக் கட்டிகள் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. இன்றைய தினம் 90 கிலோ வெள்ளிக் கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வெள்ளித் தேருக்கு தேவைப்படும் வெள்ளிக் கட்டிகளை வழங்குவதற்கு உபயதாரர்கள் தயாராக இருக்கின்றார்கள். இந்த புதிய வெள்ளித் தேரின் பணிகள் முழுமையாக நிறைவுற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 1 அன்று பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் ஒப்படைக்கப்படும்.

திருச்செந்தூர் திருக்கோயில் யானை தாக்கி இருவர் உயிரிழந்த சம்பவம் குறித்த செய்தி அறிந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இரு குடும்பத்தினரையும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறி பேசச் சொல்லி இருந்தார்.

உடனடியாக அத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் அருள்முருகன் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். இது எதிர்பாராத ஒரு சம்பவமாகும். திருக்கோயில் யானை கூட அவர்கள் இறந்த பிறகு அவர்களைப் பார்த்து அழுததும், அவர்களது உடலை பார்த்து தட்டித் தட்டி எழுப்பியதும் காண்பவர்களை மனதினை கலங்க செய்த நிகழ்வை அனைவரும் அறிவீர்கள். சிறிய அளவில் ஏற்பட்ட சினத்தால் இந்த நிகழ்வு நடந்ததாக அந்த இடத்தில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகளைப் பார்த்த போது தெரிய வருகிறது.

இதுகுறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் திருக்கோயில் சார்பில் பணியாற்றுபவர். மற்றொருவர் ஏற்கனவே யானைப் பாகனாக இருந்தவரின் மகன். அந்த இரண்டு குடும்பங்களுக்கும் தேவையான உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்குவதாக தெரிவித்திருக்கிறார். இறந்து போன பாகனின் மனைவிக்கு கருணை அடிப்படையில் திருக்கோயிலில் ஏதாவது ஒரு பணி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, திருக்கோயில் யானைகளைப் பொறுத்தளவில் மாதம் இருமுறை கால்நடை மருத்துவர்களை கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அவற்றிற்கு தேவையான உணவுகள் மற்றும் நடைபயிற்சி மருத்துவர்களின் பரிந்துரையின் படியே வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோயில்களில் இருக்கின்ற யானைகளுக்கு நீச்சல் குளம் கட்டி வழங்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் திருச்செந்தூரில் நடைபெற்ற சம்பவம் ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம். இனி வாழ்நாளில் எங்கும் இது நடக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய பிரார்த்தனையாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி உதவிடுவோம்.

கலைஞருக்கு அமைக்கப்பட்டுள்ள சிலைகள் குறித்து சீமான் தெரிவித்துள்ள கருத்து குறித்து கேட்டீர்கள். தமிழகத்தில் கலைஞரின் உடன்பிறப்பு என்ற ஒரு வார்த்தையால் தூக்கி எழுப்பிய கரங்கள் ஒரு கோடிக்கு மேல் இருக்கின்றது. ஒரு சில லட்சங்களை கொண்ட இவருடைய கரங்களே இது போன்ற சிலைகளை உடைக்க முற்படுமானால் ஒரு கோடிக்கும் மேலாக இருக்கின்ற உடன்பிறப்புகளின் கரங்கள் எப்படி பதம் பார்க்கும் என்பதை உங்கள் கேள்விக்கே விட்டு விடுகிறேன். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்த அளவில் எப்படிப்பட்ட பகை வந்தாலும் அதை தோற்கடிக்கின்ற வல்லமை பொருந்திய படைதான் திராவிட படையாகும். நாங்கள் சமத்துவம் சமாதான பேசுவதால் கோழைகள் என்று நினைத்து விடாதீர்கள் எங்களுக்குள்ளும் வீரம் இருக்கின்றது. சீண்டல்கள் என்பது வார்த்தையில் இருக்கக் கூடாது, அதேபோல தேர்தல் காலங்களில் அவருடைய செல்வாக்கை நிரூபிக்க வேண்டும் இவற்றை தவிர்த்து வாய்க்கு வந்ததை பேசிவிட்டு போவதில் எந்தவிதமான பலனும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை ஆணையர்கள் திருமதி இரா. வான்மதி, திருமதி ஐ.முல்லை, உதவி ஆணையர் திரு.கே.சிவகுமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இ.எம். எஸ்.மோகன் மற்றும் அறங்காவலர்கள், திருக்கோயில் சிவாச்சாரியார் காளிதாஸ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை குறித்து

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர ஆலோசனைக் கூட்டம் !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டம் தி.மு.க. சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர்க் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய் கிரிஷ் திருமண மண்டபத்தில் இன்று (20-11-2024 புதன்கிழமை) மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட கழக பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன். எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர். ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அது சமயம் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்:** திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி அடுத்த பட்டாபிராம் பகுதியில் டைட்டில் பார்க் திறப்பு விழாவுக்கு வருகை தரும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் வருகை

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**

செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; “மற்ற மாநிலங்கள் அதிக நிதிப் பகிர்வைக் கோரினாலும், தமிழ்நாடு அரசுதான் தங்களுக்கு நிதிப் பகிர்வை அளிப்பதற்கு என்னென்ன காரணங்கள் என அளித்துள்ள விளக்கம் மிகச் சிறந்தது” என்று 16 ஆவது நிதிக் குழுத் தலைவர் அரவிந்த பனகாரியா பாராட்டிக் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; பாராட்டோடு நின்று விடாமல், தமிழ் நாட்டுக்கான நிதிப் பகிர்வையும் நியாயமாகச் செய்ய வேண்டும். பாராட்டுச் சொற்கள் மட்டும் பசியை ஆற்றிவிடாது !**

# தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி மாநில நிர்வாகிகள் - தகவல் தொழில் நுட்ப அணியின் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் தொகுதி பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாகிகள் கூட்டம் (21-11-2024 - வியாழன்) மாலை 4 மணிக்குக் கழக தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

பொருள்: 1. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்

2. கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்

3. துணை முதலமைச்சரின் பிறந்தநாள் நலத்திட்ட பணிகள்.

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா**

செயலாளர்

தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி



கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் நடைபெற்ற கொலைவெறித் தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வரும் செயலாளர் ரெஜிராஜை கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே. ஆர்.முருகேசன், தென்காசி தெற்கு மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாதன், இளைஞர் அணியைச் சேர்ந்த துரை பேச்சிமுத்து ஆகியோர் சந்தித்து நலம் விசாரித்தனர். அப்போது கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.


## பெருநகர சென்னை மாநகராட்சி


**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு**

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2024- ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மேயர்**

செ.ம.தொ.இ / 1157 / வரைகலை / 2024

நகர்புற பசுமைப் பகுதிகள் உருவாக்கும் திட்டத்தின் கீழ், தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளில் 2,245 மரக்கன்றுகள் நடுகின்ற நிகழ்ச்சியை தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி ஆணையர் சீ. பாலசந்தர், 3வது மண்டல குழு தலைவர் ச.ஜெயபிரதீப், செம்பாக்கம் தெற்கு பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.